**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 116** **நாள்: 25.08.2016**

**வளசரவாக்கம் மருத்துவமனை சாலையில் 100 படுக்கைகளை கொண்ட சமுதாய நல மைய மருத்துவமனை கட்டும் பணியினை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. பா. பெஞ்சமின் அவர்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. அலெக்சாண்டர் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்!**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (25.08.2016) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–151, சின்ன போரூருக்குட்பட்ட வளசரவாக்கம் மருத்துவமனை சாலையில் ரூபாய். 7.95 கோடி மதிப்பீட்டில், 100 படுக்கைகள் கொண்ட சமுதாய நல மைய மருத்துவமனை கட்டும் பணியினை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. பா. பெஞ்சமின் அவர்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. அலெக்சாண்டர் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்த மருத்துவமனை, மனையின் மொத்த பரப்பளவு 1,29,167 சதுர அடி ஆகும். தளங்களின் எண்ணிக்கை தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள், தரைதளம் 18,083 சதுர அடி ஆகும், முதல் தளம் 17,077 சதுர அடி மற்றும் இரண்டாவது தளம் 17,077 சதுர அடி என உத்தேசிக்கப்பட்டுள்ளது

இந்நிகழ்வில், துணை ஆணையர் (பணிகள்) திரு. கே.எஸ். கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப. அவர்கள், வளசரவாக்கம் மண்டல குழுத்தலைவர் திரு. கே. சேகர், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஆர். தங்கம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**